மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே நாம் அதிக அளவிலேதான் குடும்பக் கட்டுப்பாட்டுப் பணிகள் அத்தனையையும் செய்து வருகிறோம். இந்தியத் துணைக்கண்டத்திலே எல்லாவற்றிலும் நாம் தான் முன்னணியில் இருக்கிறோம். இப்போது ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சில இடங்களில் இருக்கிற அறுவை அரங்குகள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதை நானே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன் ; குறிப்பாக லீக்கேஜ் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை பொதுப்பணித்துறை மூலமாக நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கருவிகள் இல்லையென்று சொன்னார்கள். அதை எல்லாம் வாங்கித் தரவேண்டுமென்று உத்தர விடப்பட்டிருக்கிறது. சில இடங்களில் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அதை ஒவ்வொன்றாக எடுத்து முழுமையான பயன்பாட்டுக்குக் கொண்டுவர இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 444, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. காஞ்சி பன்னீர் செல்வம் கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

444—

செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள சமூக நலக் காடுகள்.

*9525—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் பரப்பளவு சமூக நலக்காடுகள் ஏற்படுத்தப்பட்டன ?

(ஆ) தற்பொழுது பராமரிக்கப்படும் ஏக்கர்கள் எவ்வளவு ?

(இ) இதற்கான செலவு விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 69,500 ஏக்கர் நிலங்கள் பராமரிக்கப்படுகின்றன.

(ஆ) 69,500 ஏக்கர் நிலங்களில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1993 ஏப்ரல் 23]

(இ) 2 கோடியே 33 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் இதில் வருமானம் வருகிறது.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 69,500 ஏக்கர் பராமரிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் எத்தனை ஏக்கர்கள் கொடுக்கப்படவுள்ளது என்பதையும், இந்த சமூக நலக்காடுகள் எந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட இருக்கிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கட்டப் பணிகளாக 1988–89-லிருந்து 1991–92 வரையிலும் அதற்காக பராமரிப்புச் செலவுக்காக மொத்தம் 2,598 இலட்சம் ரூபாய் நாம் செலவு செய்திருக்கிறோம். அதேபோல 1992–93-க்கு மட்டும் 898 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது. ஏறத்தாழ பராமரிப்புக்கு மட்டும், அதாவது மரங்களை நட்டு தோட்டங்களை வளர்த்து பராமரிக்க மட்டும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 69,500 ஏக்கர் நிலங்களும் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். இந்திய நாட்டின் மூன்று மாநிலங்களுக்குத்தான் இந்த 'சீடா' என்ற திட்டத்தை அதாவது தமிழ்நாடு, பீகார், மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் மட்டும்தான் இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தியாவிலேயே சிறந்த இத்திட்டத்தைப் பயன்படுத்துகிற மாநிலமாகவும், சிறப்பான முறையில் சமூகக் காடுகளை வளர்க்கிற மாநிலம் என்று எடுத்துக்கொண்டால் தமிழகத்திலே இன்றைக்கு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலேதான் என்பதைப் பாராட்டுகின்ற அளவுக்கு நடந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 445 திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. என். ஆர். சிவபதி கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

445—

போக்குவரத்துக் கழகங்கள் பெற்றுள்ள விருதுகள்.

*11738—திரு. எச். எம். ராஜு :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—